தெவிநுவர பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெவிநுவர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தெவிநுவர பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டவணைகள், காணி உறுதிகள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடு மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 8,825,338 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | உரிய அட்டவணைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 1,357,269 தொகை பெறுமதியான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் 219 தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டு வருகின்றது என. | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,207,364 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,266,485 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

**(அ) வீதவரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 3582 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு 651 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 5,081,031 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் காரணமாக போக்குவரத்துகள் வரையறுக்கப்பட்டிருந்தமையால் நிலுவையை அறவீடு செய்வதற்கு முடியாமல் போனது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 73,778 தொகைக்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நியமனம் செய்யப்பட்ட புதிய குழுவின் மூலம் கணிப்பீட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

(இ) குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 146 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு 91 கடையறைகளில் இருந்து ரூபா 12,858,556 இற்கான மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக குத்தகையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தலல்ல கடலேரிப் பாதையில் 289.30 சதுர அடிகளைக் கொண்ட 02 மாடி ஹோட்டல் கட்டிடம் ஒன்று முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் உள்ளடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சதுர மீற்றர் ஒன்றிற்காக ரூபா 1,500 வீதம் 578.6 சதுர மீற்றருக்காக ரூபா 867,900 இற்காக கட்டணம் அறவீடு செய்து நிர்மாண வேலை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 பூர்த்தியான கிராமம் மக்கள் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தலல்ல தெற்கு முகந்திரம் வத்த பாதையில் கொங்கிரீட் பரப்பி அபிவிருத்தி செய்யும் நிர்மாண | இந்த நிர்மாண வேலைகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது Core மாதிரிகள் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 7 | உரிய நியமத்தின் படி நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒப்பந்தங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | வேலை சங்கம் ஒன்றிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 432,831 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட கனத்தில் கொங்கிரீட் பரப்பப்பட்டு இருக்காமை, பாதையில் போடப்பட்ட கொங்கிரீட் கலவை Grade 20 வலுவுடன் காணப்படாமை மற்றும் ஒப்பந்தம் வழங்குதல் முறைசாரா விதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. | நாட்கள் மற்றும் 28 நாட்கள் வலுவை அளவை செய்யும் தரப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டது எனவும், ஒப்பந்த சங்கத்தினால் கடன் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கான இயலுமை காணப்படுகின்றது என சத்தியப் பிரமாணக் கூற்று பெற்றுக் கொண்டு ஒப்பந்தம் வழங்கப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என. | வழங்குதல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 மார்ச் 18 திகதிய சபைத் தீர்மானத்தின் மீது பெத்தெகம்மெத்த கரப்பந்தாட்ட விளையாட்டுத் திடல் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,467,466 தொகைக்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு சமூக அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு மீளாய்வாண்டு ஒக்தோபர் 04 திகதி சாட்டப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 23 திகதி வரை விளையாட்டுத் திடலை நிர்மாணிப்பதற்காக சபைக்கு சொந்தமான காணி ஒன்றில் இருந்து பொருளாதார பெறுமதியுள்ள 141.28 கியூப்கள் மண் வெட்டப்பட்டு அதில் 14 கியூப்கள் மாத்திரம் புவிச் சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படாத தெவிநுவர தலைவரின் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றிற்காக கட்டணம் அறவிடப்படாமல் சபையின் சாரதிகள் மற்றும் தொழிலாளர்களை ஈடுபடுத்தி போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது. | வெட்டப்பட்ட மண் லொறி வண்டிகளுக்கு ஏற்றுவதற்காக மாத்திரம் பதிவு இலக்கம் ZA 5646 கொண்ட பெக்கோ இயந்திரம் வாடகை அடிப்படையில் ஒப்பந்த சங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது எனவும் புவிச்சரிதவியில் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தில் இருந்து பெற்றிருந்த அனுமதிப் பத்திரத்தில் மண் போடப்படும் இடமும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த இடங்களுக்கு குறிப்பிட்ட ஒப்பந்த சங்கத்தினால் மண் எடுத்துச் சென்று போடப்பட்டிருந்தது எனவும். | மிகவும் ஆக்கபூர்வமாக சபைக்கு சொந்தமான வளங்கள் பாவிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019/2020 ஆண்டுகளின் போது உஸ்வத்த பாதை பக்கச் சுவர் போடப்பட்டு அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 170,476 தொகை இரண்டு சந்தர்ப்பங்களில் முறைசாரா விதமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீண்டும் 2018 ஏப்ரல் 02 திகதிய ஒப்பந்த வேலை சங்கத்தினால் போலி பில் பத்திரம் ஒன்று சமர்ப்பித்து மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது என. | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |